இருப்பவர்கள் நியமன உறுப்பினர்களா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா ? பொது மக்களிடமிருந்து பங்குத் தொகை என்று ஏதாவது வாங்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மற்ற கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி உருவாக்கப்படுகிறதோ அதே அடிப்படையில் உருவாக்கப்படும். ஆனால் இதிலே அதிகார பற்றற்றவர்கள் யாரும் கிடையாது. மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராகக் கொண்டு அதிகாரிகளே இதில் இருக்கிறார்கள். ஒரு கோட்ட மின் பொறியாளரை அதை இயக்குவதற்கு நாம் தருகிறோம். இதிலே உறுப்பினர்கள் பங்கு தொகை உண்டு. சுமார் 10 லட்சம் ரூபாய் உறுப்பினர் பங்குத்தொகை இருக்கிறது. இதுதான் இதனுடைய நிர்வாக அமைப்பு முறை.

மின் கட்டணத்தைத் திருத்தியமைக்கும் திட்டம்.

*வினா எண். 646—திரு. கு. ரமணி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெட்ரோல், டீசல் விலை மத்திய அரசு உயர்த்தியுள்ளதால் மின் கட்டணத்தை மாநில அரசு உயர்த்தப் போகிறதா ?

(ஆ) ஆம் எனில் கட்டண உயர்வின் அளவு என்ன ?

(இ) அதனால் மின்வாரியத்துக்கு அதிக வருமானம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) (ஆ) மற்றும் (இ) : எரி எண்ணெய் உட்பட இடுபொருள்கள் விலையுயர்வு, தமிழ்நாடு மின் வாரியம் வாங்கும் மின் சக்தியின் விலையுயர்வு மற்றும் மின் அனுப்புதலில் ஏற்படும் கூடுதல் செலவினங்கள் முதலியவற்றின் அடிப்படையில் மின் கட்டணங்களைப் பொதுவாக திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின் உற்பத்திக்கு தேவையான அத்யாவசியமான பொருள்களின் விலையை உயர்த்தும் போது மத்திய அரசு மாநில அரசுகளை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கலந்து ஆலோசிக்க வற்புறுத்தப்படுமா ? ஏற்படுகிற இழப்புகளுக்கு மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மானியம் தர வற்புறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே இடு பொருள்களின் விலையை உயர்த்துகிற போது மத்திய, அரசு, மாநில அரசை கலந்து கொள்ள வேண்டுமென்று மின் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே வற்புறுத்தப்பட்டது. அண்மையிலே நடந்த தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்திலும் நம்முடைய அரசு சார்பிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக மத்திய அரசானாலும், மாநில அரசானாலும் ஆறாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு கூடுதல் நிதி திரட்டி வருகிறார்கள். மத்திய அரசு அதை சுலபமாக மாநிலங்களிலிருந்து திரட்டி விடுகிறது. மாநிலங்கள் திரட்டுவதற்கு மக்களிடம் போக வேண்டியிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, டீசல், பெட்ரோல் போன்ற பொருள்களின் விலை உயர்வால் மின்சார கட்டணத்தை உயர்த்துவதற்கு ஆலோசிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் எவ்வளவு உயர்த்தப் போகிறீர்கள் ? உயர்த்துகிற காலங்களில் விவசாயத்திற்கு ஏற்கனவே அதிகமான அளவிற்கு கட்டணம் இருப்பதால் அதை உயர்த்தாமல் பெரிய தொழில்களுக்கு இன்றைக்கு 3 காசு, 4 காசு என்று சப்ளை செய்யக் கூடிய அவற்றிற்கு மின் கட்டணம் உயர்த்தக் கூடிய முறையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எவ்வளவு என்பது அரசு உயர்த்துகிறபோது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சுலபமாக தெரியும் என்று கருதுகிறேன். விவசாயத்தைப் பொறுத்த வரையில் அதிகமான கட்டணம் என்று யாராவது அவரிடத்தில் சொல்வார்களானால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் 72 ஆம் ஆண்டு 12 காசு நம்முடைய விவசாயிகள் செலுத்தினார்கள். இன்றைய ரூபாயின் மதிப்பில் அது 5.4 காசு தான். ஆகவே அவர்களுக்கு ஏற்கனவே இருந்ததைவிட குறைத்துத் தருகிறோம். 12 காசு 72-லே செலுத்தியவர்கள் இப்போது 5.4 காசு தான் செலுத்துகிறார்கள். தொழிற் துறையிலே உயர்த்துவதற்கு சாத்தியக் கூறுகளை இந்த அரசு ஆராய்ந்து வருகிறது. அதிக அளவிற்கு உயர்த்தி விடுவதால் தொழில்கள் நம்முடைய மாநிலத்தை விட்டு ஓடி விடக்கூடாது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் பதிலிலே ஏதோ கணக்கு போட்டு இந்த தடவை 12 காசுக்கு குறைவாக கட்டுகிறார்கள் என்று சொன்

னார்கள். ஆனால் பெரிய விவசாயிகளுக்கு 14 காசு என்று இருந்ததே அது 15 காசாக வசூலிக்கப்படுகிறதே, அது எப்போது உயர்த்தப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே நான் ஏதோ கணக்கு போட்டு சொன்னேன் என்று உறுப்பினர் சொல்கிறார். நான் போட்ட கணக்கு அல்ல, அது உண்மையான கணக்கு. 1960-லே 1 ரூபாய் அது 72-லே 49.5 காசுக்கு சமம் 82-லே 21.7 காசுக்கு சமம். இது நாட்டிலே இருக்கக் கூடிய நடை முறைக் கணக்கு. நான் போட்ட கணக்கல்ல. அந்த கணக்கின் அடிப்படையிலே 72-லே 12 காசு, விவசாயிகள் அந்த மதிப்பின் அடிப்படையிலே 5.4 காசு என்றுதான் கட்டுகிறார்கள். என்று பொருள். ஆனால் அது 16 காசு என உயர்த்தப்பட்டு, அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு அதைக் குறைத்து அவர்கள் கேட்டதோ 1 காசு குறையுங்கள் என்று தான் சொன்னார்கள், ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் எப்போதும் தாராளமாக இருப்பதை போல அந்த 16 காசை 14 ஆக குறைத்து, சிறு விவசாயிகளுக்கு மேலும் 2 காசை குறைத்து 12 காசாக ஆக்கினார்கள்.

வினா எண். 647—மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றது.

[முற்பகல் 9.10]

பொட்டனேரியிலுள்ள மேச்சேரி செம்மறி ஆட்டு ஆராய்ச்சிப் பண்ணை.

*வினா எண். 648—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பொட்டனேரியிலுள்ள உள்ள மேச்சேரி செம்மறி ஆட்டு ஆராய்ச்சிப் பண்ணையை விரிவு படுத்த எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைச்சேரி வெள்ளாடு களைப்பற்றிய சிறு அளவிலான மாதிரிக் கூடம் ஒன்று நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாசன வசதிகளைப் பெருக்கு வதற்காக தற்போதுள்ள கிணற்றை தவிர மேலும் ஒரு குழாய்க் கிணறு தோண்ட, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வு செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஒரு சிறிய பழப்பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது. தீவனப் பொருட்கள் மற்றும் பசுந் தழைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய, ஒரு சத்துணவு சோதனைக் கூடம் அமைக்கப்பட்டு வருகிறது.